ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஏ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2009

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2009), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2009)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிமுகம் செய்திருக்கிற, இந்தச் சட்டமுன்வடிவுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்ப்பைப் பதிவு செய்வதோடு மட்டுமல்லாமல், இந்தச் சட்டத் திருத்தத்தைத் திரும்பப் பெறவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே மோட்டார் சைக்கிள்களுக்கு இருக்கின்ற வரி விதிப்பில் Life Tax விதித்திருக்கிறார்கள். அதேபோல, Light Motor Vehicle என்னும் சிறு பளு ஊர்திகளுக்கும் ஏற்கெனவே வரி விதிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல, Other Motor Vehicles என்னும் பிற இயக்கூர்திகளுக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கிடையிலே, கூடுதல் வரி விதிப்பாக இப்போது Road Safety Tax—சாலைப்

---

[@] 20–7–2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பாதுகாப்பு வரி என்ற பெயரில் கூடுதலாக மிதி இயக்கிகளைப் பதிவு செய்கின்றபொழுது, 250 ரூபாயும், அதேபோல சிறு பளு ஊர்திகளுக்கு 1,500 ரூபாயும், பிற ஊர்திகளுக்கு 2,000 ரூபாயும் கூடுதலாக வரி விதிப்பதற்கு இந்தச் சட்டத் திருத்தம் வழிவகை செய்கிறது. ஏற்கெனவே, டீசல் விலை, பெட்ரோல் விலை உயர்வால், இங்கே சிறு வாகனங்களைப் பயன்படுத்துகிறவர்களும், நடுத்தர வாகனங்கள் மற்ற எல்லா வகை மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துகிற அனைவரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஏற்கெனவே இருக்கின்ற வரி விதிப்போடு நான்கு வழிச் சாலைகளில் சுங்க வரியும் வசூலிக்கப்படுகிறது.

பிற்பகல் 3–00

வாகனங்களைப் பயன்படுத்துகிற அத்தனை பேரும் ஏதாவது ஒரு வழியிலே வரி கட்டுவது என்ற நிலை இருக்கின்றபொழுது அவர்களுக்குக் கூடுதல் பளுவாக இப்பொழுது இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவது உள்ளபடியே பொதுமக்களை மிகக் கடுமையாகப் பாதிக்கும். நோக்க காரண விளக்கத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதில் ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன். இங்கே சாலைப் பாதுகாப்பு வரி என்ற பெயரில் ஏற்கெனவே விபத்திற்கு நிவாரணம் அளிப்பதற்காக இந்தக் கூடுதல் வரி விதிப்பு என்று சொல்லுகிறார்கள். நான் அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் ஏற்கெனவே இருக்கின்ற வரி வருவாய்களிலிருந்து அந்தச் செலவுகளை மேற்கொள்ளலாம். அதற்கென்று சிறப்பாக, தனியாக ஒரு வரி விதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் மக்களுடைய நலன் கருதி, இந்த அரசு மக்களைப் பாதிக்கின்ற இந்தச் சட்டத் திருத்தத்தைத் திரும்பப் பெறவேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசு புதிதாக சாலைப் பாதுகாப்பு வரியை விதித்திருக்கிறது. அதற்கான சட்டத்தை இங்கே கொண்டு வருகிறது. ஏற்கெனவே நம்முடைய அரசு ஒவ்வோர் ஆண்டும் வாகன வரியைச் செலுத்த வேண்டுமென்ற நிலையை மாற்றி, இப்போது life tax-ஐக் கொண்டு வந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து இப்போது இதுபோன்ற

வரிகளை விதித்து, வாகனங்களை வாங்குபவர்களுக்கு அல்லது அதற்கான உரிமையாளர்களுக்கு நிதிச் சுமையை ஏற்படுத்துவது என்பது நியாயமற்ற ஒன்று. ஏற்கெனவே சாலைகளில் சுங்க வரி வேறு வசூலிக்கப்படுகிறது. இப்போது மோட்டார் வாகன உரிமையாளர்கள்கூட ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். அதில், ஒரு மாதத்திற்கு ஒரு லாரி உரிமையாளர் 21,000 ரூபாயை சாலைகளுக்காக மட்டும் செலுத்துகிற நிலையைச் சொல்லியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுபோன்ற வாகன உரிமையாளர்களுக்கு இது மேலும் ஒரு சுமையாக இருக்கும். விபத்திலே சிக்குபவர்களுக்கு இழப்பீடு கொடுப்பதற்காக இந்த வரி வசூல் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு வாகனத்தையும் பதிவு செய்கிறபோது அதை நாம் insure செய்கிறோம். அதன்மூலம் அவர்களுக்கு இழப்பீடு கிடைக்கவிருக்கிறது. அது இல்லாமல், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நிதியிலேயிருந்து தனியாக அவர்களுக்கு வழங்குகிற நிதி இருக்கிறது. அப்படி இருக்கிறபோது நம்முடைய அரசு, போக்குவரத்துத் துறையின்மூலம் இதுபோன்ற வரிகளை வசூலிப்பதைத் தவிர்க்க வேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் விபத்து நிவாரணப் பணம் என்ற வகையிலே, முதல் ஆண்டு 5 கோடி ரூபாய், இரண்டாவது ஆண்டு 10 கோடி ரூபாய், மூன்றாவது ஆண்டு 15 கோடி ரூபாய் என்ற அளவிலே அரசாங்கத்திலிருந்து பணம் தந்தாலும், போக்குவரத்துத் துறை சார்பாகத் தருகின்றபோது, விபத்திலே மரணம் அடைந்தால் அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்றும், அதே நேரத்தில் சிறு காயமோ அல்லது காயமோ ஏற்படுகின்றபொழுது அவர்களுக்கு அதற்கேற்றாற்போல் பணத்தை ஒதுக்கித் தந்துகொண்டிருக்கிறோம். இப்போது இருக்கின்ற விலைவாசி, இப்போது இருக்கின்ற மருத்துவச் செலவு அல்லது இப்போது அவர்களுக்குத் தேவையான பணம் என்ற வகையிலே பார்க்கும்போது இழப்பீடு மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்குக் கூடுதலாகத் தரவேண்டுமென்ற எண்ணம் உள்ளது. வேறு வழியில்லை. அதாவது இந்த வரியை வசூல் செய்து

இதை அரசாங்கத்திற்கு எடுத்துக்கொண்டு மற்ற பணிகளுக்குத் தந்தால் அது தவறு. ஆனால், இந்த வரியை வசூல் செய்து, விபத்து ஏற்பட்டவர்களுக்கு மானியமாகத் தரப்படுவதற்காகத்தான் இந்த வரி விதிக்கப்பட்டது. ஏன் என்று நீங்களெல்லாம் கேட்கலாம். அரசாங்கத்திலே நீங்கள் சேர்த்துக் கொடுக்கலாமே என்றுதான் நீங்கள் சொல்கிறீர்கள். அரசாங்கத்தில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 100 சதவிகிதம் கூடுதலாகப் பணம் தந்தும்கூட நாம் இன்னும் கொஞ்சம் கூடுதலாகத் தரவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. மேலும், இப்போது சாதாரண Two wheeler என்று எடுத்துக்கொண்டாலே அது 40 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வரை விற்கிறது; நாங்கள் கேட்பது வெறும் 250 ரூபாய். Car என்று எடுத்துக்கொண்டால் சாதாரணமாக விலை 5 இலட்சம் ரூபாய்; நாங்கள் கேட்பது வெறும் 1,500 ரூபாய். Lorry என்று எடுத்துக்கொண்டால் விலை 10 இலட்சம் ரூபாய்; நாங்கள் கேட்பது 2,000 ரூபாய். இந்த வரி விதிப்பு என்பது மக்களுக்கு உதவ விபத்து இழப்பீடு கொடுப்பதற்காகத்தானே தவிர மற்ற செலவிற்காக அரசாங்கம் இதை எடுத்துக்கொள்ளவில்லை. அதனால்தான் இந்த வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நான்கு வழிச் சாலைகளிலே சுங்க வரி வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். குறிப்பாக ஒன்றைச் சொல்கிறேன். 100 கிலோ மீட்டர் நான்கு வழிச் சாலையிலே ஒரு லாரியோ அல்லது பேருந்தோ அல்லது வேறெந்த வாகனமோ செல்லுகின்றபோது மிச்சப்படுகின்ற டீசல் மதிப்பைவிட அவர்கள் கொடுக்கிற வரி குறைவு. அந்த அளவுக்குத்தான் இருக்கும். நீங்கள் பார்த்தால், மேடு பள்ளமாக இருக்கின்ற சாலைகளிலே வண்டிகள் போகின்றபோது டீசலுக்கு ஆகின்ற செலவைவிட சுங்க வரி என்பது குறைவுதான். எனவே, மக்களுடைய வசதிக்காகத்தான் அந்தச் சாலைகள் போடப்படுகின்றன. மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்று நீங்கள் இப்படிப் பார்த்தால் நாங்கள் ஆண்டுதோறும் அலுவலகங்களைப் புதிதாக திறக்கவேண்டிய அவசியமும் இல்லை, ஆண்டுதோறும் ஆட்கள் எடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. நான் இந்தப் பொறுப்பை ஏற்கின்றபோது ஓராண்டுக்கு 9 இலட்சம் வண்டிகள் பதிவாகிக் கொண்டிருந்தன. இப்போது 10.5 இலட்சம் வண்டிகள் பதிவாகிக்கொண்டிருக்கின்றன. எனவே, மக்கள் இதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. எனவே, இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 3–05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் *2* மற்றும் *3*, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் *2* மற்றும் *3* சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு *1*, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*2009* ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *30/2009*) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஐ) தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2009

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *2009* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *34/2009*), மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*2009* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *34/2009*)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வழக்கம்போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

---

@ *21–7–2009* ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.